**உங்களது நியாயவிலை கடையின் பொருள்கள் இருப்பு விவரம் தெரிந்து கொள்ள வேண்டுமா ?**

தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின்படி ஒவ்வொரு குடும்ப அட்டைதாரரும் அவரது கடையில் வழங்கப்படும் பொருட்களின் இருப்பு விவரங்களை அறிந்து கொள்ளும் உரிமையுள்ளது<http://rti.gov.in/>. ஒவ்வொரு கடையின் இருப்பு விவரத்தினையும் அமுதம் மற்றும் கூட்டுறவு நிறுவனத்தின் கடை விற்பனையாளர் பிரதி மாலை குறுஞ்செய்தி (SMS) வாயிலாக கணனி மையத்திற்கு அனுப்பி வைக்கின்றார். இந்த தகவலினை ஒவ்வொரு குடும்ப அட்டைதாரரும் தமது கடைக்கு செல்லாமலே இருந்த இடத்தில் இருந்து கொண்டு அறிந்து கொள்ள வழி வகைசெய்யப்பட்டுள்ளது. நியாய விலைக் கடையின் முந்தைய தின இருப்பினை குறுஞ்செய்தி (SMS) வாயிலாக தங்களது செல்பேசி மூலம் ஒரு அட்டைதாரர் தெரிந்து கொள்ளலாம்.

**எவ்வாறு குறுஞ்செய்தி (SMS) அனுப்புவது என்கின்ற விவரம் இங்கே தரப்பட்டுள்ளது**

**குறுஞ்செய்தி அனுப்ப வேண்டிய செல்லிடைப்பேசி எண்கள் 9789006492 , 9789005450**

**விவரம் பெறும் முறை PDS<space><District Code><space><Shopcode> என பதிவு செய்து அனுப்பவும்**

**எ.கா. PDS 10 AA001 என SMS அனுப்பினால் சேலம் மாவட்டத்தின் AA001 என்கின்ற கடையின் முந்தைய தின இருப்பு விவரத்தினை தெரிந்து கொள்ளலாம்.**

**( மாவட்ட குறியீடு மற்றும் கடை குறியீடு ஆகியவை உங்கள் குடும்ப அட்டையிலேயே உள்ளது.)**

குடும்ப அட்டைதாரர்கள், தன்னார்வ நுகர்வோர் அமைப்பினர், மகளிர் சுய உதவி குழுவினர் மற்றும் இதர முகமைகள் இந்த தகவலினை சீரிய முறையில் பயன்படுத்தி நியாய விலைக் கடைகளுக்கு செல்லும் முன் தங்களது கடையின் இருப்பு விவரத்தினை தெரிந்து கொண்டு சென்று சேவை பெறவும். மேலும் இது தொடர்பான தங்களது கருத்துக்களை பின்வரும் மின்அஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
ccs@tn.gov.in. consumer@tn.gov.in & consumer@tn.nic.in